BLESSING POWER GUIDE
BLESSING TUITION & TUTORIAL CENTRE
No:12, Ganesh Appartment, Trust Square Street, Medavakkam, Ayanavaram, Ch-12
ISO 9001 : 2015 Certified Institution

# TAMIL MODEL QUESTION (1) 2026 - 2027

மதிப்பெண்கள் 100 காலம் 3.00 மணி

## பகுதி I ( மதிப்பெண்கள் 15 )

i)அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii)கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 X 1 = 15

1. வால்காவிலிருந்து கங்கை வரை என்ற நூலை எழுதியவர் ......................

அ ராகுல சாங்கிருத்யாயன் ஆ சேக்ஸ்பியர் இ தாகூர் ஈ கணமுத்தையா

2. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் எது?

அ.இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ.என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ.இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ.என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்.

3. பின்வருவனவற்றுள் முறையான தொடர் எது?

அ.தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
ஆ.தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
இ.தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
ஈ.தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

4. பரிபாடல் அடியில் 'விசும்பில், இசையில்' ஆகிய சொற்கள் குறிப்பவை எவை?

அ.வானத்தையும் பாட்டையும் ஆ.வான்வெளியில், பேரொலியில்
இ.வானத்தில், பூமியையும் ஈ.வானத்தையும் பேரொலியையும்

5. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ________ இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ________

அ.அமைச்சர், மன்னன் ஆ.அமைச்சர், இறைவன்
இ.இறைவன், மன்னன் ஈ.மன்னன், இறைவன்

6. இரவீந்திரநாத தாகூர் ________ மொழியில் எழுதிய கவிதைத் தொகுப்பான கீதாஞ்சலியை ________ மொழியில், மொழிபெயர்த்த பிறகுதான் அவருக்கு நோபல்பரிசு கிடைத்தது.

அ.ஆங்கில, வங்காள ஆ.வங்காள, ஆங்கில
இ.வங்காள, தெலுங்கு ஈ.தெலுங்கு, ஆங்கில

7. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது –

அ.குலைப்பெயர் வகை ஆ.மணிப்பெயர் வகை இ.கிளைப்பெயர் வகை ஈ.இலைப்பெயர் வகை

8.கீரனுக்குக் கவரி வீசிய மன்னர் ......................................

அ பெருஞ்சேரல் இரும்பொறை ஆ நற்சேரல் பொறை
இ இளஞ்சேரல் இரும்பொறை ஈ இரும்பொறை மாறன்

9. பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க.

அ. கொண்டல் – 1.மேற்கு
ஆ. கோடை – 2.தெற்கு
இ. வாடை – 3.கிழக்கு
ஈ. தென்றல் – 4.வடக்கு

அ. 1,2,3,4 ஆ. 3,1,4,2 இ. 4,3,2,1 ஈ. 3,4,1,2

10. காசிக்காண்டம் என்பது –

அ.காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ.காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ.காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ.காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

11. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ........

அ.எந் + தமிழ் + நா ஆ.எந்த + தமிழ் + நா இ.எம் + தமிழ் + நா ஈ.எந்தம் + தமிழ் + நா





பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு ( 12,13,14,15 ) விடைதருக.

ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்
நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு
தீங்கு உளை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே
ஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா.

12. பாடலை இயற்றியவர் ..........................

அ. அதிவீரராம பாண்டியன் ஆ. கண்ணதாசன் இ. பரஞ்சோதி முனிவர் ஈ. கம்பர்

13. இப்பாடலில் இடம்பெற்றுள்ள 'வயல்' என்ற பொருள்படும் சொல் ......................

அ. உளை ஆ. நீத்து இ. தண் ஈ. பணை

14. பாடலில் இடம்பெற்றுள்ள சீர் மோனை ......................

அ. ஓங்கு – நீங்கு ஆ. ஆங்கு – அருளினால் இ. அல்லேம் – அல்லை ஈ. தீங்கு – ஆங்கு

15. இப்பாடல் இடம் பெற்ற நூல் ..........................

அ. திருவிளையாடற் புராணம் ஆ. கம்பராமாயணம் இ. முத்தொள்ளாயிரம் ஈ. காசிக் காண்டம்

## பகுதி II ( மதிப்பெண்கள் 18 )

### பிரிவு 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 4X2=8

21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16.விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ. மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார்.
ஆ. தாவரங்களில் விளையும் தானியங்களை மணி என்போம்.

17. சொல்வளத்தை உணர்த்த உதவும் நெல் வகைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

18. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

கட்டுரைகள், கடிதங்கள், இயங்கலைத் தேர்வுகள், இலக்கண விளக்கங்கள், கற்றல் வளங்கள், கையேடுகள், மனவரைபடங்கள், மாதிரி வினாத்தாள்கள், தமிழ் சார்ந்த எண்ணற்ற பதிவுகளுக்கு WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

19. செல்வம் பெருகுவதும் வறுமை வந்து சேர்வதும் எதனால் என வள்ளுவர் உரைக்கின்றார்?

20. மொழிபெயர்ப்பின் பயன் குறித்து எழுதுக.

21. தரும் – என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5X2=10

22. பலகை என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

23. பிழைகளைத் திருத்தி எழுதுக.

"தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை
தேரும் சிலப்பதி காறமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே"

24. வினைத்தொகையை விளக்குக.

25. படிப்போம்; பயன்படுத்துவோம்! அ Monolingual ஆ Culture

26. கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார். அடிக்கோடிட்ட சொற்களை உம்மைத் தொகையாக மாற்றி எழுதுக.

27. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ. தொடு – தோடு ஆ. வளி – வாளி

28. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி III ( மதிப்பெண்கள் 18 )

பிரிவு 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2X3=6

29. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'

இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. பலதுறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது?

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது. கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாக இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடுகிறார். கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

அ. விருந்தும் ஈகையும் யார் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்?

ஆ. கண்ணகி வருந்தியதற்குக் காரணமாக இளங்கோவடிகள் குறிப்பிடுவது யாது?

இ. உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

பிரிவு 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2X3=6

34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

34.அடிபிறழாமல் எழுதுக.

அ. தென்னன் மகளே எனத்தொடங்கும் கனிச்சாறு மனப்பாடப் பாடல் அல்லது

ஆ.விருந்தினனாக எனத்தொடங்கும் காசிக்காண்டம் மனப்பாடப் பாடல்.

பிரிவு 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2X3=6

35. மார்கழித் திங்கள் அதிகாலை நேரத்தில் மக்கள் நடைப்பயிற்சி மேற்கொண்டனர். சிலர் மிதிவண்டியில் சென்றனர். சாலை ஓரத்தில் இருந்த வீட்டின் மதிலை ஒட்டி செங்காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்கியபடி இருந்தன. அவற்றைப் பார்த்தபடியே வீடு சென்றேன்.

பத்தியைப் படித்துத் தொகைநிலைத் தொடர்களைக் கண்டறிந்து எழுதுக.

36. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது'

இவை அனைத்தையும் யாம் அறிவோம்.

இக்கூற்றில் அடிக்கோடிட்ட சொற்களைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

37. எடுத்துக்காட்டு உவமையணியை விளக்குக.

பகுதி IV ( மதிப்பெண்கள் 25 )

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5X5=25

38. அ. ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறிய கருத்துகளை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

அல்லது

ஆ. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.





39. அ. உங்கள் கிராமத்திற்கு நூலக வசதி வேண்டி பொது நூலகத்துறை இயக்குநர் அவர்களுக்குக் கடிதம் வரைக.

அல்லது

ஆ. மாவட்ட அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. வீட்டு எண் 52, மருதம் நகர், சென்னை மாவட்டத்தில் வசித்து வரும் உதயனின் மகன் மணிக்காகக் கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. அ. மொழிபெயர்க்க

Translation is an art in itself. No one can do that. A translator should be neutral and not attached to any language. Specifically, he should be proficient in both the languages i.e. both the language and the source language. They should be familiar with the social and cultural conditions of both the languages.

அல்லது

ஆ புயலின் அறிவிப்பைக் கேட்ட உன் செயல்களை எழுதுக.

பகுதி V ( மதிப்பெண்கள் 24 )

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3X8=24

43. அ நாட்டு வளமும் சொல் வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழி நின்று விளக்குக.

அல்லது

ஆ. சங்க காலத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பைச் சான்றுகளுடன் விளக்குக.

44. அ அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

அல்லது

ஆ "பிரும்மம்" கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர் போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.

45. அ சான்றோர் வளர்த்த தமிழ் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

அல்லது

ஆ விசும்பின் துளியும் பசும்புல் தலையும் எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**BLESSING POWER GUIDE**

**BLESSING TUITION & TUTORIAL CENTRE**

No:12, Ganesh Appartment, Trust Square Street, Medavakkam, Ayanavaram, Ch-12

ISO 9001 : 2015 Certified Institution

மதிப்பெண்கள் 100 **TAMIL MODEL QUESTION (2) 2026 - 2027** காலம் 3.00 மணி

பகுதி I ( மதிப்பெண்கள் 15 )

*i)அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.*

*ii)கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.* **15 X 1 - 15**

1. தாய்சேய் என்பது ..........................................................

அ. உம்மைத்தொகை ஆ. உவமைத்தொகை இ. வினைத்தொகை ஈ. அன்மொழித்தொகை

2. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது –

அ.இலையும் சருகும் ஆ.தோகையும் சண்டும் இ.தாளும் ஓலையும் ஈ.சருகும் சண்டும்.

3. காலில் அணியும் அணிகலனைக் குறிப்பது ________

அ.சுட்டி ஆ.கிண்கிணி இ.குழை ஈ.சூழி

4. செய்தி 1 – ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

செய்தி 2 – காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழ்நாடு இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.

செய்தி 3 – இந்தியாவிற்குத் தேவையான மழை அளவில் எழுபது விழுக்காடு மழையைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்.

அ. செய்தி 1 மட்டும் சரி ஆ. செய்தி 1, 2 ஆகியன சரி

இ. செய்தி 3 மட்டும் சரி ஈ. செய்தி 1, 3 ஆகியன சரி

5. உவப்பின் காரணமாக அஃறிணையை உயர்திணையாகக் கொள்வது ________

அ.இட வழுவமைதி ஆ.பால் வழுவமைதி இ.திணை வழுவமைதி ஈ.காலவழுவமைதி

6. கீழ்க்காண்பனவற்றுள் எந்த இலக்கியம் பிறமொழிப் படைப்பினைத் தழுவித் தமிழில் படைக்கப்பட்டது?

அ.திருக்குறள் ஆ.கம்பராமாயணம் இ.கலித்தொகை ஈ.சிலப்பதிகாரம்

7. படர்க்கைப் பெயரைக் குறிப்பது எது?

அ.யாம் ஆ.நீவிர் இ.அவர் ஈ.நாம்

8. நன்மொழி என்பது –

அ.பண்புத்தொகை ஆ.உவமைத்தொகை இ.அன்மொழித்தொகை ஈ.உம்மைத்தொகை

9. 'மகிழுந்து வருமா?' என்பது –

அ.விளித்தொடர் ஆ.எழுவாய்த்தொடர் இ.வினையெச்சத்தொடர் ஈ.பெயரெச்சத்தொடர்

10. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'.

இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை –

அ.நிலத்திற்கேற்ற விருந்து ஆ.இன்மையிலும் விருந்து

இ.அல்லிலும் விருந்து ஈ.உற்றாரின் விருந்து

11. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது'

– தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –

அ.பாடிய, கேட்டவர் ஆ.பாடல், பாடிய இ.கேட்டவர், பாடிய ஈ.பாடல், கேட்டவர்

**பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு ( 12,13,14,15 ) விடைதருக.**

**விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்**
**கரு வளர் வானத்து இசையில் தோன்றி,**
**உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்**
**உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் அழியும்**



BLESSING TUITION & TUTORIAL CENTRE

12. இப்பாடலின் ஆசிரியர் .....................................

அ கீரந்தையார் ஆ பெருஞ்சித்திரனார் இ பாரதியார் ஈ குமரகுருபரர்

13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் .................................

அ பரிபாடல் ஆ பெருமாள் திருமொழி இ கனிச்சாறு ஈ காசிக்காண்டம்

14. விசும்பு என்பதன் பொருள் ..........

அ சக்கரம் ஆ மழை இ கடல் ஈ வானம்

15. ஊழ் ஊழ் – இலக்கணக்குறிப்பு ............................

அ வினைத்தொகை ஆ அடுக்குத்தொடர் இ இரட்டைக்கிளவி ஈ பண்புத்தொகை

பகுதி II ( மதிப்பெண்கள் 18 )

பிரிவு 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 4X2=8

21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16.விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ. உலகக் காற்று நாள் ஜூன் 15.

ஆ. கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

17. மென்மையான மேகங்கள் துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.

18. இவ்வுலகம் நமக்கு உரிமை உடையதாக வேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டியதை எழுதுக.

கட்டுரைகள், கடிதங்கள், இயங்கலைத் தேர்வுகள், இலக்கண விளக்கங்கள், கற்றல் வளங்கள், கையேடுகள், மனவரைபடங்கள், மாதிரி வினாத்தாள்கள், தமிழ் சார்ந்த எண்ணற்ற பதிவுகளுக்கு WWW.TAMILTHUGAL.BLOGSPOT.COM

19. தமிழர்கள் வீசுகின்ற திசையைக் கொண்டு காற்றுக்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளனர்?

20. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

21. விடும் – என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5X2=10

22. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் – இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

23. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.

அ. சிறு – சீறு ஆ. தான் – தாம்

24. கால வழுவமைதியை விளக்குக.

25. படிப்போம்; பயன்படுத்துவோம்! அ Tempest ஆ Hospitality

26. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களின் வகையைக் கண்டறிந்து விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.

27. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

அ. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும். ஆ. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

28. கிளர்ந்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

Contact: 94860 17820 / 81488 14326 BLESSING POWER GUIDE Website: https://blessingtuition.weebly.com

### பகுதி III ( மதிப்பெண்கள் 18 )

பிரிவு 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2X3=6

29. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது.
இவ்வாறு நீர் தன்னைப் பற்றிப் பேசினால்... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

30. 'தனித்து உண்ணாமை' என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படையாக அமைந்தது. இப்பண்பு இக்காலத்தில் அடைந்துள்ள மாற்றங்களைப் பட்டியலிடுக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

சின்னமனூர்ச் செப்பேடு சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கி வந்த இராமாயணம், மகாபாரத தொன்மச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன. இதுவும் பிறமொழிக் கருத்துகளை, கதைகளைத் தமிழ்ப்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது. பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் உள்ளிட்ட சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையே.

அ. வடமொழிக் கதையைத் தழுவிப் படைக்கப்பட்ட தமிழ் இலக்கியங்கள் யாவை?
ஆ. சின்னமனூர்ச் செப்பேடு எதனைப் புலப்படுத்துகிறது?
இ. உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு தருக.

பிரிவு 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2X3=6

34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

33. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

34. அடிபிறழாமல் எழுதுக.
அ. புண்ணியப் எனத்தொடங்கும் திருவிளையாடற்புராணம் மனப்பாடப் பாடல் அல்லது
ஆ. கொள்வோர் எனத்தொடங்கும் காலக்கணிதம் மனப்பாடப் பாடல்.

பிரிவு 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2X3=6

35. வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடம் சுற்றுச்சூழல் பற்றிய பாடலைப் பாடிக் காட்டினார். இதை மாணவர்கள் கவனமாகக் கேட்டுப் பாடினர். மாணவர்கள் கேட்ட பாடலில் இருந்து ஆசிரியர் சிறுவினாக்களைக் கேட்டார். இப்பாடல் குறித்த உங்கள் கருத்துகளை எழுதி வாருங்கள். நன்றாக எழுதுபவருக்குப் பரிசு உள்ளது என்றும் ஆசிரியர் கூறினார். வண்ணமிட்ட சொற்களுக்கான தொகாநிலைத் தொடர்களைக் கண்டறிக.

36. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, "என்னடா விளையாட வேண்டுமா?" என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம் "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

37. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.





### பகுதி IV ( மதிப்பெண்கள் 25 )

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5X5=25

38. அ. மலர்ந்தும் மலராத பாதி மலர் போல வளரும் விழி வண்ணமே – கவிஞர் கண்ணதாசனின் இந்தப் பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க. அல்லது
ஆ. கண்ணோட்டம் அதிகாரத்தில் கூறிய கருத்துகளை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

39. அ. மாநில அளவில் நடைபெற்ற 'கலைத்திருவிழா' போட்டியில் பங்கேற்று 'கலையரசன்' பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. அல்லது
ஆ. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. திருவள்ளுவர் தெரு, கதவு இலக்கம் 70, சிவகாசியில் வசிக்கும் ஆனந்தன் என்பவரின் மகள் நந்தினி என்பவர் சிவகாசி பொது நூலகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தம்மை நந்தினியாகப் பாவித்து படிவத்தை நிரப்புக.

42. அ. மொழிபெயர்க்க

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India.Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thankyou one and all.

அல்லது

ஆ பள்ளியிலும் வீட்டிலும் நீங்கள் செய்யும் நல்ல செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

### பகுதி V ( மதிப்பெண்கள் 24 )

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.** 3X8=24

43. அ காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக. அல்லது
ஆ. தமிழின் இலக்கிய வளம்– கல்வி மொழி– பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள்– பிற துறைக் கருத்துகள்– தமிழுக்குச் செழுமை – மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

44. அ "கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே", என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

அல்லது

ஆ புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

45. அ தமிழரின் விருந்தோம்பல் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. அல்லது
ஆ சான்றோர் வளர்த்த தமிழ் எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**BLESSING PATHWAY EDUCATION (OPC) PRIVATE LIMITED.**

**BLESSING POWER GUIDE**

**BLESSING TUITION & TUTORIAL CENTRE**

No:12, Ganesh Appartment, Trust Square Street, Medavakkam, Ayanavaram, Ch-12.

**ISO 9001: 2015 Certified Institution**

## 10TH STD TAMIL
## QUARTERLY EXAM MODEL QUESTION PAPER (3) – 2026 & 27

குறிப்புகள் :

(i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I (மதிப்பெண்கள்: 15)

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.** **(15X1=15)**

1. எந்தமிழநா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

(அ) எந் + தமிழ் + நா (ஆ) எந்த + தமிழ் + நா

(இ) எம் + தமிழ் + நா (ஈ) எந்தம் + தமிழ் + நா

2. "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்" நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -அ) இலையும் சருகும்ஆ) தோகையும் சண்டும்இ) தாளும் ஓலையும்ஈ) சருகும் சண்டும்

3. மார்கழித் திங்கள் - இச்சொல்லின் தொகையைத் தேர்க.

(அ) பண்புத்தொகை

(ஆ)இருபெயரொட்டுப்பண்புத்தொகை

(இ) அன்மொழித் தொகைஈ) உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை

4. "மடியாறாதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

(அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. (ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

(இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

(ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

5. 'மகிழ்ந்து வருமா?' என்பது

(அ) விளித்தொடர் (ஆ) எழுவாய்த்தொடர்

(இ) வினையெச்சத்தொடர் (ஈ) பெயரெச்சத்தொடர்

6. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் -----

(அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது (ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது

(இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் (ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

7. பசுமையான --------- யைக் --------- கண்ணுக்கு நல்லது. தொடருக்குப் பொருத்தமான தொழிற்பெயர்களைத் தேர்க

(அ) மரம்; குளிர்ச்சி (ஆ) பூக்கள்; காட்சி (இ) காட்சி; காணுதல் (ஈ) புல்வெளி; கண்டு

8. உவப்பின் காரணமாக அஃறிணையை உயர்திணையாகக் கொள்வது

(அ) இட வழுவமைதி (ஆ) பால் வழுவமைதி (இ) திணை வழுவமைதி (ஈ) கால வழுவமைதி

9. செய்தி 1: ஒவ்வோர் ஆண்டும் சூன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.

செய்தி 2: காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.

செய்தி 3: காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்!

(அ) செய்தி 1 மட்டும் சரி (ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி

(இ) செய்தி 3 மட்டும் சரி (ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

10. கீரை என்ற சொல்லின் கூட்டப் பெயரைத் தேர்க

(அ) கட்டு (ஆ) குலை (இ) குவியல் (ஈ) தாறு

11. 'எழுது என்றாள்' என்ற தொடர் அடுக்குத் தொடர் இடம்பெறுமாறு அமைந்து வருவதைத் தேர்க.

(அ) எழுது எழுது என்றாள் (ஆ) எழுதிப் பிடி என்றாள்

(இ) எழுதிக் காட்டு என்றாள் (ஈ) விரைவாக எழுது என்றாள்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

"ஓங்கு தன் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறுதீங்கு உளை அல்லை காண் செய்யுளை இகழ்தலாலேஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா."

12. பாடல் இடம்பெற்றுள்ள நூல்

(அ) புறநானூறு (ஆ) அகநானூறு

(இ) பரிபாடல் (ஈ)திருவிளையாடற்புராணம்

13. இப்பாடலை இயற்றியவர்

(அ) கீரந்தையார் (ஆ) பரஞ்சோதி முனிவர் (இ) அதிவீரராம பாண்டியர் (ஈ) பெருங்கௌசிகனார்

14. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகை நயத்தைக் கண்டறிக.

(அ) பணைசூழும் - ஒரு போதேனும் (ஆ) அல்லேம் - ஆயினும்

(இ) ஓங்கு தண் - நீங்கும் (ஈ) இடத்தில் - இகழ்தலாலே

15. தண்பனை என்ற சொல்லின் பொருள்

(அ) பனைமரம் (ஆ) குளிர்ந்த வயல் (இ) பனங்காடு (ஈ) கடம்பவனம்

### பகுதி - II (மதிப்பெண்கள்:18)

பிரிவு - 1



Contact: 94860 17820 / 81488 14326 BLESSING POWER GUIDE Website: https://blessingtuition.weebly.com

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **(4X2=8)**

**வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. தமிழர்கள், வீசுகின்ற திசையைக் கொண்டு காற்றுக்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளனர்.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் எழுதுக.

(அ) மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது.

(ஆ) பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்.

18. மென்மையான மேகங்கள், துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.

19. இவ்வுலகம் நமக்கு உரிமை உடையதாக வேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டியது எது என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

20. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

21. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **(5X2=10)**

22. அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

23. கலைச்சொல் தருக.

அ) Monolingual ஆ) Multi media

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினாஒரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம். புதிருக்கான விடையை எழுதுக.

24. பழமொழிகளை நிறைவு செய்க. அ) விருந்தும் ______ ஆ) உப்பிலாப்பண்டம் ______

25. 'பலகை' என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

26. தண்ணீர்க்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களின் வகையைக் கண்டறிந்து விரித்து எழுதுக.

27. அம்மா சொன்னார், துளிர் பார்த்தாள் - இந்த எழுவாய்த் தொடர்களுக்குக்கேற்ற வினையெச்சத் தொடர்களை எழுதுக.

28. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

**பகுதி - III (மதிப்பெண்கள்:18)**

பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **(2X3=6)**

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க



BLESSING TUITION & TUTORIAL CENTRE

காற்றை மாசுபடுத்துவதால் இருப்பதே நமது இன்றியமையாமைக் கடமை. கரியமில வாயுவை எடுத்துக்கொண்டு நம் நுரையீரலுக்குத் தேவையான உயிர் வளியைத் தரும் மரங்களை வளர்ப்பது நமது இன்றியமையாத பொறுப்பாகும். நல்ல முறையில் குப்பை மேலாண்மையை மேற்கொள்வதே காற்றைத் தூய்மையாக வைத்திருப்பதற்கான வழிமுறை. பொதுப் போக்குவரத்துக்கு முன்னுரிமை தருதல், மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளைப் பயன்படுத்துதல், சமையலுக்கு விறகுகளைப் பயன்படுத்துவதை விட்டு விடுதல் நிலக்கரி, கச்சா எண்ணெய் போன்றவற்றைத் தவிர்த்தல் முதலான நடவடிக்கைகள் காற்று மாசுபாட்டைத் தவிர்க்கலாம்.

வினாக்கள்:

(அ) காற்று மாசுபாட்டைத் தவிர்க்க நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இரண்டினை எழுதுக.

(ஆ) மரங்களை ஏன் வளர்க்க வேண்டும்?

(இ) சமையலுக்கு எவற்றைப் பயன்படுத்துவது காற்று மாசுபாட்டைத் தவிர்க்கும் என்று கருதுகிறீர்கள்?

30. பல துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது?

31. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.' இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். (2X3=6)**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

33. ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறிய கருத்துக்களை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

(அ) "அன்னை மொழியே" எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல்.

(அல்லது)

(ஆ) "புண்ணியப் புலவீர்" எனத் தொடங்கும் திருவிளையாடற் பாடல்.

பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **(2X3=6)**

35. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது. தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்று விட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, "என்னடா விளையாட வேண்டுமா"? என்று கேட்டேன். என் தங்கையும் அங்கே வந்தாள். அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள். இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

36. "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்கல்லார் அறிவிலா தார்"

இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு காண்க.

37. மார்கழித் திங்கள் அதிகாலை நேரத்தில் மக்கள் நடைப்பயிற்சி மேற்கொண்டனர். சிலர் மிதிவண்டியில் சென்றனர். சாலை ஓரத்தில் இருந்த வீட்டின் மதிலை ஒட்டிச் செங்காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்கியபடி இருந்தன. அவற்றைப் பார்த்தபடியே வீடு சென்றேன். பத்தியைப் படித்துத் தொகைநிலைத் தொடர்களைக் கண்டறிந்து எழுதுக.

**பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** (5X5=25)

38.(அ) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக்கணிதம்கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்பொன்னிலும் விலைமிகு பொருளென் செல்வம்!இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!ஆக்கல் அளித்தல் அழித்தல்மூன்றும்அவனும் யானுமே அறிந்தவை;அறிக – கவிஞர் கண்ணதாசன்

39. (அ) மாநில அளவில் நடைபெற்ற "கலைத்திருவிழா" போட்டியில் பங்கேற்று "கலையரசன்" பட்டம் பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

(ஆ) உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

41. எண் - 15, வள்ளலார் தெரு, பாரதி நகர், அரியலூர் மாவட்டத்தில் வசிக்கும் அருளரசு என்பவரின் மகள் புனிதா, கணக்கர் பணி வேண்டித் தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னை புனிதா எனக் கருதி, பணி வாய்ப்பு வேண்டித் தன் விவரப் பட்டியலை நிரப்புக.

42. (அ) இன்சொல் பேசுவதாலும் வன்சொல் பேசுவதாலும் ஏற்படும் விளைவுகளைப் பட்டியலிட்டு, அவற்றில் நீங்கள் செல்லும் வழி, உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது? என்பதைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்க்க.

**பகுதி - V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3X8=24

43.(அ) தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துக்கள் - பிற துறைக் கருத்துக்கள் - தமிழுக்குச் செழுமை. மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) நாட்டு வளமும் சொல்வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழிநின்று விளக்குக.

44. (அ) 'பிரும்மம்' கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர்போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) "புயலிலே ஒரு தோணி" கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி பாடுபட்டதை எவ்வாறு விவரிக்கின்றன என்பதைக் கதைவழி சுவைபட விவரிக்க.





45. (அ) குறிப்புகளைக் கொண்டு மதிப்புரை எழுதுக. பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/ கட்டுரை/ சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக. குறிப்புகள்: நூலின் தலைப்பு - நூலின் மையப்பொருள் - மொழிநடை - வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு - சிறப்புக் கூறு - நூல் ஆசிரியர்.

(அல்லது)

(ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி "சுற்றுச்சூழல் பாதுகாப்பு" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. குறிப்புகள்: முன்னுரை - இயற்கையைப் போற்றுவோம் - சுற்றுச்சூழல் மாசுபாடு - விளைவுகள் - சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வழிமுறைகள் - முடிவுரை.

